**நகராட்சி அலுவலகம்,**
**சாத்தூர்.**
**நாள்: 21.06.2021**

**சாத்தூர் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்**

**நிகழும் மங்களகரமான ஆண்டு பிலவ வருடம் ஆனி 7 ஆம் நாள் 2021ம் ஆண்டு ஜுன் மாதம் 21 ஆம் நாள் திங்கள்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரணக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருட்கள் விவரம் பின்வருமாறு.**

**முன்னிலை : திரு.என்.ராஜமாணிக்கம், எம்.ஏ.,**
**தனி அலுவலர்,**
**சாத்தூர் நகராட்சி.**

பொருள் எண்: 1

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.22866/2018/பி3/ நாள்: 23.08.2018–ன்படி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் நகர் பகுதியில் மூன்று இடங்களில் நுண் உயிர் உரக்குடில் (Micro Compost Centre) அமைக்கும் பணி செய்ய ரூ. 152.30 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளித்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்கண்ட பணியினை எடுத்துச் செய்வதற்கு உரிய தொழில்நுட்ப அனுமதியினை நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்: 18281/2018/டி.வோ.2 நாள்: 28.08.2018 வழங்கப்பட்டுள்ளது.

பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு 27.09.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளியை இறுதி செய்து இந்நகர் மன்ற தீர்மான எண்.335 நாள்: 13.12.2018ல் குறைவான ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு பணி உத்திரவு வழங்க அனுமதி பெறப்பட்டது.

இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.327/2018/எம்1 நாள்: 12.10.2018ல் வழியாக வார்டு எண்1, 3 மற்றும் 14ல் ஒப்பந்தக்காரர் திரு.பி.சுப்பாராஜ் என்பவருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. இதில் வார்டு 14ல் மட்டும் பணி முடிக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. வார்டு எண்.3–ல் எடுத்துக்கொள்ளப்பட்ட பணி மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்குரிய நிர்வாக அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களால் வழங்கப்பட்டு தற்போது பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

வார்டு எண் 1–ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டபோது அந்தப் பகுதியிலுள்ள பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் வரப்பெற்றது அதனை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளை வழக்கு எண்கள் 3459/2019–ல் அப்பகுதி மக்களால் வழக்குகள் தொடரப்பட்டது. மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக எதிர்வுறை தாக்கல் செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது. மேலும் வழக்கு தொடரப்பட்டு ஓராண்டுகள் ஆகியும் கொரோனா கொள்ளை நோய் பரவுதலை முன்னிட்டு நீதிமன்றங்கள் சரிவர செயல்பாட்டில் இல்லாததால் பணியினை தொடர முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட திட்டபணியானது மத்திய மாநில அரசுகளால் நிதி ஒதுக்கீடு செய்து தேசிய அளவில் இப்பணிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதால் திட்டப்பணியின் அவசியம் கருதி பொது சுகாதார நலன் கருதியும் பணியினை விரைந்து முடிக்கும் பொருட்டு அப்பகுதியை ஒட்டிய மாற்று இடமான சர்வே எண்.262 வார்டு ஏ, பிளாக் 24–ல் பணியினை மேற்கொள்ள திருத்திய நிர்வாக அனுமதி கோரி அதற்கான கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 327/2018/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 761, நாள்: 21.06.2021.**

**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 2

சாத்தூர் நகராட்சியில் 2021–2022–ம் ஆண்டுக்கு குடிநீர் விநியோகப் பராமரிப்பு பணிகளை பார்ப்பதற்கு நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் மேற்கண்ட பராமாரிப்பு பணிகளை ஒப்பந்தக்காரர் மூலம் மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

(ந.க.எண். 208/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 762, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 3

சாத்தூர் நகராட்சியில் 2021–2022 ஆண்டுக்கு பாதாளச் சாக்கடை பராமரிப்பு பணிகளை பார்ப்பதற்கு நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் மேற்கண்ட பராமரிப்பு பணிகளை ஒப்பந்தக்காரர் மூலம் மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின்அனுமதிக்கு.

(ந.க.எண். 209/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 763, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 4

சாத்தூர் நகராட்சியில் 2021–2022 ஆண்டுக்கு அடிபம்பு மற்றும் விசைப் பம்புகளைப் பராமரிப்பு பணிகளை பார்ப்பதற்கு நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தால் மேற்கண்ட பராமாரிப்பு பணிகளை ஒப்பந்தக்காரர் மூலம் மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.
(ந.க.எண். 207/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 764, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 5

சாத்தூர் நகராட்சியினால் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2018–2019–ம் ஆண்டுக்கு 19 எண்ணம் பேட்டரி வாகனம் வாங்கப்பட்டுள்ளது. இவ்வாகனத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகளின் விதிகளின்படி சப்ளை செய்த நிறுவனமே ஓராண்டுக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளப்பட வேண்டும். தற்போது ஓராண்டுகள் முடிவுறுதால் மேற்கண்ட வாகனத்தினை ஆண்டு பராமரிப்பு பணிகளாக மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.4,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.
(ந.க.எண். 125/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 765, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 6

சாத்தூர் நகராட்சியினால் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 2018–2019–ம் ஆண்டுக்கு 19 எண்ணம் பேட்டரி வாகனம் வாங்கப்பட்டுள்ளது. இவ்வாகனத்தில் ஏற்படும் பழுதுகளை பார்ப்பதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.7,00,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண். 125/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 766, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 7

சாத்தூர் நகராட்சியில் **2021–22** ஆண்டிற்கு நகராட்சி மூலம் புதிதாக வீட்டுக் குழாய் இணைப்புகள் வழங்கிட அரசாணை எண்.**97/12.07.2007**–ன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். **748/08** குடிநீர் வழங்கல் துறை நாள்: **21.09.2009**ன் படியும் ஏற்கனவே நிர்ணயம் செய்யப்பட்ட மதிப்பீட்டுக் கட்டணத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் **5** சதவீதம் உயர்வு செய்து வசூல் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி நடப்பாண்டான **2021–22**க்கு ஏப்ரல் **2021** முதல் புதிதாக பெறப்படும் குடிநீர் குழாய் இணைப்பு விண்ணப்பங்களுக்கு கீழ்க்காணும் விபரப்படி கட்டணம் நிர்ணம் செய்து வசூல் செய்திட மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பதிவுக் கட்டணம் | ரூ.110/– |
| 2. | **வைப்புத் தொகை**<br>அ) வீட்டு பயன்பாடு<br>ஆ) வீட்டு பயன்பாடல்லாதவை | <br>ரூ.7000/–<br>ரூ.16,000/– |

**சாலை சீரமைப்பு கட்டணம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 3. | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை கட்டணம் ரூ. | தார் சாலை கட்டணம் ரூ. | சிமெண்ட் சாலை கட்டணம் ரூ. |
| | | கட்டணம் | கட்டணம் | கட்டணம் |
| | 0–30 மீட்டர் நீளத்திற்கு | 1900/– | 4055/– | 4690/– |
| | 30–90 மீட்டர் நீளத்திற்கு | 3150/– | 5135/– | 5775/– |
| **மேற்பார்வைக் கட்டணம்** | | | | |
| 4. | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணம் | கருங்கல் சல்லி சாலை ரூ. | தார் சாலை ரூ | சிமெண்ட் சாலை ரூ. |
| | | மேற்பார்வைக் கட்டணம் (20%) | மேற்பார்வைக் கட்டணம் (20%) | மேற்பார்வைக் கட்டணம் (20%) |
| | 0–30 மீட்டர் நீளத்திற்கு | 380/– | 815/– | 940/– |
| | 30–90 மீட்டர் நீளத்திற்கு | 630/– | 1030 /– | 1155/– |
| 5. | ஆய்வுக் கட்டணம் | | | ரூ. 1250/– |

(ந.க.எண். 201/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 767, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 8

சாத்தூர் நகராட்சியினால் **2020–21**ம் ஆண்டிற்கு சாத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து வார்டு.**8** மேலகாந்திநகர் வெள்ளைக்கரை ரோடு சந்திப்பில் அங்கன்வாடி மையம் அமைக்கும் பணிக்கு **18.02.2021**–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு. பி.சுப்புராஜ் – மதிப்பீட்டை விட 1.52% அதிகம்

2. திரு. ஆர். தாமோதரக்கண்ணன் – மதிப்பீட்டை விட 0.65% குறைவு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.தாமோதரக்கண்ணன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 344/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 768, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 9

சாத்தூர் நகராட்சியினால் 2020–2021–ம் ஆண்டிற்கு சாத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து மதுரை-கன்னியாகுமாரி மாநில நெடுஞ்சாலையில் 15 எண்ணம் எல்.இ.டி மின்விளக்கு அமைக்கும் பணியினை எடுத்துச் செய்ய 18.02.2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. M/s.Sri Ramakrishna Agencies – மதிப்பீட்டை விட 0.6% குறைவு

2. M/s.Udhayam Traders, Electrical & Electronics – மதிப்பீட்டை விட 1.2% அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.SriRamakrishna Agencies நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 344/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 769, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 10

சாத்தூர் நகராட்சியினால் 2020–21ம் ஆண்டிற்கு சாத்தூர் சட்ட மன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து வார்டு.8 மேலகாந்திநகரில் பொதுக்கழிப்பிடம் அமைக்கும் பணியினை எடுத்துச் 18.02.2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு. பி.சுப்புராஜ் – மதிப்பீட்டை விட 1..25% அதிகம்

2. திரு. ஆர். தாமோதரக்கண்ணன் – மதிப்பீட்டை விட 0.72% குறைவு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.ஆர்.தாமோதரக்கண்ணன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 344/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 770, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 11</u>

சாத்தூர் நகராட்சியினால் 2018–19ம் ஆண்டிற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 19 எண்ணம் பேட்டரி வாகனம் வாங்கப்பட்டுள்ளது அதற்க்கு ஆண்டு பராமரிப்பு செய்ய 12.02.2021ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. M/s.Priyam Industries & Engineerig Pvt Ltd. – மதிப்பீட்டை விட .2.70% குறைவு
2. M/s.Arun Indian Motors – மதிப்பீட்டை விட 0.542% குறைவு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Priyam Industries & Engineering Pvt Ltd நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 125/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 771, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 12</u>

சாத்தூர் நகராட்சியினால் 2018–19ம் ஆண்டிற்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 19 எண்ணம் பேட்டரி வாகனம் வாங்கப்பட்டுள்ளது அதற்கு பழுது பார்க்கும் பணிக்கு தேவையான உதிரி சப்ளை செய்ய 12.02.2021ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு விலைப்புள்ளி பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. M/s.Priyam Industries & Engineerig Pvt Ltd. -- குறைவு
2. M/s.Arun Indian Motors, -- அதிகம்

வரப்பெற்ற விலைப்புள்ளி யில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Priyam Industries & Engineering Pvt Ltd நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 125/2020/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 772, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 13</u>

சாத்தூர் நகராட்சியினால் 2020–2021–ம் ஆண்டிற்கு பொது நிதியிலிருந்து நகராட்சி பகுதியில் உள்ள வார்டு.1 முதல் 24 வரை பகுதிகளில் உள்ள 22 எண்ணம் பொது கழிப்பறைகள் மற்றும் சமுதாய கழிப்பறைகள் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 24.11.2020–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. M/s. TPK and Co – மதிப்பீட்டை விட 0.29% அதிகம்
2. திரு.எஸ்.சேசப்பன் – மதிப்பீட்டை விட 0.14% குறைவு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.சேசப்பன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 467/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 773, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 14</u>

சாத்தூர் நகராட்சியினால் 2019–2020–ம் ஆண்டிற்கு சமூகத்தின் மீதான தொழிற் நிறுவனங்களின் பொறுப்பு நிதியிலிருந்து வார்டு.1 அண்ணநகரில் உள்ள அங்கன்வாடி மையத்தில் கழிப்பறை அமைக்கும் பணியினை எடுத்துச் செய்ய 29.10.2020–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. கே.நாராயணன் | – | மதிப்பீட்டை விட 0.27% அதிகம் |
| 2. | திரு. எம். முத்துராமலிங்கம் | – | மதிப்பீட்டை விட 0.53% அதிகம் |
| 3. | திரு.எஸ்.சேசப்பன் | – | மதிப்பீட்டை விட 0.04% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளிஅளித்துள்ள திரு.எஸ்.சேசப்பன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 309/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 774, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 15</u>

சாத்தூர் நகராட்சியினால் 2019–2020–ம் ஆண்டிற்கு சமூகத்தின் மீதான தொழிற் நிறுவனங்களின் பொறுப்பு நிதியிலிருந்து வார்டு.8 மேலகாந்திநகர் வடக்கில் உள்ள அங்கன்வாடி மையத்தில் கழிப்பறை அமைக்கும் பணியினை எடுத்துச் செய்ய 29.10.2020–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. கே.நாராயணன் | – | மதிப்பீட்டை விட 0.27% அதிகம் |
| 2. | திரு. எம். முத்துராமலிங்கம் | – | மதிப்பீட்டை விட 0.53% அதிகம் |
| 3. | திரு.எஸ்.சேசப்பன் | – | மதிப்பீட்டை விட 0.04% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.சேசப்பன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 309/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 775, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 16</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு புதியதாக இரண்டு பீரோ மற்றும் நான்கு ரேக்குகள் இராமநாதபுரம் சர்வோதயா சங்கம், சாத்தூர் நிறுவனத்தில் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.70,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 776, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 17

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு 2021–2022ம் ஆண்டுக்கு தேவையான எழுது பொருட்கள், பணமதிப்புள்ள இரசீது புத்தகம், பணமதிப்பு கணினி ரசீதுகள், பதிவேடுகள், படிவங்கள், கணினி பிரிண்டருக்கு தேவையான டோனர்கள், ரிப்பன் மற்றும் அனைத்து வகையான உதிரி பாகங்கள் அவ்வப்போது தேவைக்கேற்ப அரசு சார்ந்த கூட்டுறவு அச்சக சங்கம் மூலம் வாங்கவும், அதற்காகும் உத்தேச செலவுத் தொகை ரூ.7.00 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களிலிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் கோரி, குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரரிடமிருந்து அவ்வப்போது தேவைப்படும் போது வாங்கிக் கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.7.00 லட்சத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

2. அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.250/2020/பி1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 777, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 18

சாத்தூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகளுக்கு உரிய 3 பிரிண்டர்கள் சப்ளை செய்ய 21.04.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. கீழ்க்கண்டுள்ளபடி 3 விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | சப்ளை செய்யும் பிரிண்டரின் மாடல் | Star System Services, Sivakasi | Rathan Computers, Sivakasi | Genius Sales and Services, Sivakasi |
|---|---|---|---|---|
| 1 | Canon Image Class LBP2900B Single Function Laser Monochrome Printer (Black) | 14989 (Per/1No) | 15100 (Per/1No) | 15450 (Per/1No) |
| 2 | MP244DW All In One Laser Printer With Duplex | 24850 (Per/1No) | 25450 (Per/1No) | 25350 (Per/1No) |

அ) வரிசை எண்.1–ல் உள்ள மாடல் பிரிண்டர்க்கு Star System Services நிறுவனத்தின் விலைவிகிதம் குறைவாக உள்ளதால் 1 பிரிண்டர் சப்ளை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) வரிசை எண்.2–ல் உள்ள மாடல் பிரிண்டர்க்கு Star System Services நிறுவனத்தின் விலைவிகிதம் குறைவாக உள்ளதால் 2 பிரிண்டர் சப்ளை செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 348/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 778, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 19

சாத்தூர் நகராட்சி அலுவலகத்தில் உள்ள கணினிகளுக்கு உரிய பிரிண்டர்கள் வாங்கப்பட்டு சுமார் 15 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.தற்போது மெயின் அலுவலகத்தில் உள்ள பிரிண்டர்கள், ஸ்கேனர் மற்றும் ஜெராக்ஸ் மிஷின்கள் முற்றிலும் பழுதுடைந்து இயக்க முடியாத நிலையில் உள்ளது. எனவே அன்றாட பணிகள் பார்ப்பதற்கு சிரமம் ஏற்பட்டு வருவதால் கீழ்க்கண்டுள்ளபடி பிரிண்டர்கள் வாங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. மெயின் அலுவலகத்திற்கு ஸ்கேனர் மற்றும் ஜெராக்ஸ் மிஷின் – அரசு தரவிலை நிர்ணயத்தின்படி – ரூ.84,311/–க்கு (Canon IR 2006N with duplex, Platen Cover Toner)
2. பொறியியல் பிரிவிக்கு 1 பிரிண்டர், மெயின் அலுவலகத்திற்கு 2 பிரிண்டர்களை விலைப்புள்ளிகள் கோரி வாங்கலாம்.

அ) மேற்கண்ட பிரிண்டர்கள் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1,50,000/–க்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அன்றாட அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி வாங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 348/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 779, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 20

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அவர்களின் அரசாணை எண்.36, நாள்: 19.04.2021ல் கோவை தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனத்திற்கு இரண்டாம் நிலை நகராட்சிக்கு நிர்வாக பங்குத் தொகையாக ரூ.20,000/–ம் செலுத்தப்பட்டு வந்ததை, ரூ.30,000/–ம் ஆக உயர்வு செய்து வரப்பெற்றுள்ள பங்குத் தொகை உயர்வு செய்தி வரப்பெற்ற அரசாணையை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 1696/2009/சி1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 780, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்: 21

சாத்தூர் நகராட்சியினால் 2020–2021ம் ஆண்டிற்கு பொது நிதியிலிருந்து நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தில் அலங்கார மேற்கூரை, எல்.இ.டி முகப்பு விளக்குகள் மற்றும் இதர கூடுதல் பணிகளை மேற்கொள்ள 24.11.2020ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு.எம்.கண்ணன் | – | மதிப்பீட்டை விட 0.13% அதிகம் |
| 2. | திரு.எஸ்.சேசப்பன் | – | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.சேசப்பன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 468/2020/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 781, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 22</u>

சாத்தூர் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்தினை அலுவலக பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு இணையதள வசதிகள், கூடுதலாக மின்இணைப்பு பணிகள், மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு அதற்கு ஆகும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் அலுவலக பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதிற்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 372/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 782, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 23</u>

சாத்தூர் நகராட்சி புதிய அலுவலக கட்டிடத்திற்கு அருகில் உள்ள சமுதாய கூடத்தில் பொது சுகாதார பிரிவு அலுவலகம் இயங்குவதற்கு ஏதுவாக துப்புரவு அலுவலர், துப்புரவு ஆய்வாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கான மின்பொருட்கள், பொறியியல் பிரிவில் உள்ள குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை பராமரிப்பிற்கான பொருட்களை பாதுகாப்பாக வைப்பதற்காக அறைகள் தயார் செய்யவும், நகராட்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களின் பயன்பாட்டிற்கான ஆண்கள் மற்றும் பெண்களுக்கான சிறிய கழிப்பறை வசதியினை செய்வதற்கு சமுதாய கூடத்தில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அதற்கு ஆகும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.6.00 இலட்சத்திற்கு அதற்கு ஆகும் செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளவும் அலுவலக பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதிற்கும் மன்றம் அனுமதித்து அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 373/2021/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 783, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 24</u>

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட கழிவு நீர் உந்து நிலையத்தில் உள்ள 5 எச்.பி ஆயில் இன்ஜின், 5 எச்.பி மோனோ பிளாக் மோட்டார் மற்றும் 12.5 எச்.பி சப்மோட்டார்கள் இயக்குவதற்கு தேவையான சாமான்களை வாங்கி மாட்டவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.13,850/—க்கும், பணியின்அவசர அவசியம் கருதி மேற்கண்ட பணியினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதி 15—ன் கீழ் மேற்கொள்ளவும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

(ந.க.எண். 377/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 784, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 25

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட தலைமை நீரேற்று நிலையம் அருகில் உள்ள வேப்பமரம் கனமழை மற்றும் சூறாவளி காற்றினால் முறிந்து விழுந்து விட்டது. எனவே அதனை அப்புறப்படுத்தி பொது ஏலம் விட மன்றத்தின் அனமதி கோரப்பட்டுகிறது.

(ந.க.எண். 374/2021/எம்1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 785, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 26

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோக பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணியினை 2021–2022–ம் ஆண்டுக்கு ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட நிலையில் தமிழக சட்டசபை தேர்தல் நடைமுறை விதிகள் அறிவிக்கப்பட்டதால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை. எனவே குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பார்த்து வரும் ஒப்பந்தக்காரர் மூலம் ஏப்ரல் 2021 மற்றும் மே 2021–ஆகிய 2 மாதங்களுக்கு 2020–2021–ம் ஆண்டுக்கான விலைவிகிதத்திலே மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.2.10 இலட்சத்திற்க்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதி 15–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

(ந.க.எண். 221/2020/எம்1 – பகுதி 2)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 786, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 27

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடை பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணியினை 2021–2022–ம் ஆண்டுக்கு ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட நிலையில் தமிழக சட்டசபை தேர்தல் நடைமுறை விதிகள் அறிவிக்கப்பட்டதால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை. எனவே பாதாளச் சாக்கடை பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பார்த்து வரும் ஒப்பந்தக்காரர் மூலம் ஏப்ரல் 2021 மற்றும் மே 2021–ஆகிய 2 மாதங்களுக்கு 2020–2021–ம் ஆண்டுக்கான விலைவிகிதத்திலே மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.1.20 இலட்சத்திற்க்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதி 15–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

(ந.க.எண். 219/2020/எம்1 – பகுதி 2)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 787, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 28

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பகுதிகளில் அடிபம்பு மற்றும் விசைபம்பு பராமரிப்பு மற்றும் பழுது பார்க்கும் பணியினை 2021–2022–ம் ஆண்டுக்கு ஒப்பந்தப்பணியாக மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை மேற்கொண்ட நிலையில் தமிழக சட்டசபை தேர்தல் நடைமுறை விதிகள் அறிவிக்கப்பட்டதால் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை. எனவே அடிபம்பு மற்றும் விசைபம்பு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே பார்த்து வரும் ஒப்பந்தக்காரர் மூலம் ஏப்ரல் 2021 மற்றும் மே 2021–ஆகிய 2 மாதங்களுக்கு 2020–2021–ம் ஆண்டுக்கான விலைவிகிதத்திலே மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.1.00 இலட்சத்திற்க்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதி 15–ன் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும்.

(ந.க.எண். 220/2020/எம்1 – பகுதி 2)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 788, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 29

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் கொசுஒழிப்பு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் பழுதாகி உள்ளதால் அதனை நிவர்த்தி செய்ய ஆகும் செலவுத் தொகை ரூ.48,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் பொது சுகாதார அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சி விதி 15ன் கீழ் ஆறுமுக நாடார் புகைமருந்து இயந்திரம் சர்வீஸ் செண்டர் மூலம் பழுது பார்த்த வகைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.165/2020/சி1)

**நகர்மன்றத் தீர்மானம் எண். 789, நாள்: 21.06.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

**(ஓம்) என்.ராஜமாணிக்கம்,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**சாத்தூர் நகராட்சி.**